Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (10-12-65) இதழ் 301

விசுவாவசு கார்த்திகை 25 ஷஃபான் பிறை 16 வெள்ளிக்கிழமை




## பி. டி. ஐ. வேலைநிறுத்தம்

புதுடில்லி, டிச. 9

பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று காலை 24 மணிநேர அடையாள வேலை நிறுத்தமொன்றை மேற்கொண்டனர். போனஸ் கோரிக்கையின் மீது அவர்கள் இந்தவேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். வேலைநிறுத்தத்தை 14 பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் ஆதரித்துள்ளனர்.

பல்கலைக்கழக

# மாணவர் பகிஷ்கரிப்பு நீடிக்கிறது

## ஒழுக்கத்தை நிலைநாட்ட உபவேந்தர் உறுதி

கொழும்பு, வியாழன்

பேராதனை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் வித்யோதய பல்கலைக்கழக மாணவர்களும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

பல்கலைக்கழக உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலை இந்தமாணவர்களின் கோரிக்கைளில் சிலவற்றைத் தாம் ஏற்றுக்கொண்டபோதும் அவர்களது நியாய மற்ற கோரிக்கைகளையெல்லாம் வழங்கிவிடமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக உபவேந்தர் மாணவர்கள் கவுன்சில் மாணவர்சங்கம் ஆகியவற்றின் விதிகளை புனரமைப்புச்செய்வதற்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டுக் கமிட்டியை நியமிக்க முடிவு செய்துள்ளார். ஆனால் வெளிச் சங்கங்களுடன் தொடர்புகொள்வதை தாம் அனுமதிக்கப்போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார். மாணவர்களின் ஒழுங்குக்கட்டுப்பாடு பற்றி தாம் மிகக் கண்டிப்பாக இருக்கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்,

மாணவர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றுவந்தால் பல்கலைக்கழகம் குறிப்பிட்ட திகதிக்கு முன்பே மூடப்படலாமென அறியப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களின் வேலைநிறுத்தம்பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழக கவுன்சில் இன்று மாலை கூடவிருக்கிறது.

கொழும்பு குதிரைப்பந்தயத்திடல் பல்கலைக் கழக மாணவர் 21கோரிக்கைகளை முன்வைத்தும் பேராதனை மாணவர் 12 கோரிக்கைகளை முன்வைத்தும் வித்தியோதயபல்கலைக்கழகமாணவர் 46 கோரிக்கைகளைமுன்வைத்தும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

## மோட்டார் பரிசோதகர் பற்றாக்குறை விண்ணப்பதாரர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மோட்டார் போக்குவரத்துப் பரிசோதகர் பற்றாக்குறையினால் யாழ்ப்பாணத்தில் சாரதிலைசென்ஸ் சோதனைகள் குறிப்பிட்ட திகதிகளில் நடாத்த முடியாமல் பின்போடப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஒரு பரிசோதகரே கடமையாற்றுகின்றார். சில தினங்களுக்கு முன்னரே சாரதி லைசென்ஸ் பரிசோதனைத் திகதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் மோங்டார் பரிசோதகருக்கு ஒருநாள் அறிவித்தல் கொடுத்து கோர்ட்டு வழக்குகளுக்கு சமூகம் கொடுக்கும்படி சமன்ஸ் கொடுக்கப்படுவதால் மறுநாளுக்கு பரிசோதிப்பதற்காக அழைக்கப்பட்டவர்களுக்கு சாரதிகளுக்கான சோதனை நடாத்த முடியாதநிலை ஏற்படுகின்றது. ஒரு தினத்திற்கு முன்னர் அறிவித்தல் விண்ணப்பதாரர்களுக்கு தந்திமூலம் கொடுத்தாலும் சில சமயங்களில் அவர்களுக்குக் கிடைப்பதில்லையெனவும் விண்ணப்பதாரர்கள் பரிசோதனைக்காக மோட்டார் வண்டிகளை சிலதினங்களுக்கு முன்னரே ஒழுங்குசெய்துவிட வேண்டியிருப்பதால் இதன் காரணமாக சோதனை குறிப்பிட்ட திகதியில் நடைபெறாவிட்டால மோட்டார் வண்டிகளுக்கு வாடகைப் பணம் செலுத்தவேண்டிய நிலைமை விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படுகிறதெனவும் தெரிகிறது.

இதைவிட மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தில் வேலைகள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஆனால் தற்பொழுது அங்கே ஒரு உத்தியோகத்தரே கடமையாற்றுவதால் வேலைகள் தடைபட்டுமுள்ளது என அறியப்படுகிறது.

யாழ்ப்பாணமாவட்டத்தில்

## சுமார் 6 மாத காலத்தில் ரூ. 20 லட்சம் சேமிக்கப்பட்டது

சுழிபுரம், வியாழன்

''யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 6 மாதத்தில் சேமிக்கப்பட்ட சேமிப்புப் பணம் ரூபா 20,16,716 ஆகும். ஆனால் நாம் எதிர்பார்த்த தொகையிலும் இது மிகக் குறைவாகும். இப்படி குறைவு ஏற்பட்டதற்கும் பல காரணங்கள் உண்டு. முதலில் அரசாங்கம் வாழ்க்கைச் செலவு உயர்வதைத் தடுக்க வழிவகை செய்ய வேண்டும். வருங்காலத்தில் சேமித்புத் துறையில் சகலரும் பாடுபட்டு உழைக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் சேமிப்புத் துறையில் முன்னேறலாம்'' என யாழ்ப்பாண மாவட்ட சேமிப்பு இயக்க அமைப்பாளர் சமூகஜோதி சி. தியாகராஜா யாழ்ப்பாண மாவட்ட தேசிய சேமிப்பு இயக்கக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு அரசாங்க அதிபர் நெவில் ஜெயவீரா தலைமைவகித்தார். தேசிய சேமிப்பு இயக்க ஆணையாளர் திரு. வி. சச்சிதானந்தம் சில புதிய ஆலோசனைகளை வெளியிட்டார். சேமிப்பு இயக்கத்தில் விவசாயிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார். சேமிப்புக் குழுவின் செயலாளராக யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

## ராஜாஜியின் 88-வது ஜயந்தி

ராஜாஜியின் 88-வது பிறந்ததினம் ஆந்திரபிரதேச சுதந்திரா கட்சியின் சார்பாக இங்கு கொண்டாடப்பட்டது. பொதுக் கூட்டத்தில் பலர் பாராட்டு தெரிவித்துப் பேசினர். ராஜாஜியின் தொண்டு நீண்டகாலம் நாட்டுக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக தீர்மானம் நடைபெற்றது, (பி,டி.ஐ.)

## புகைத்தல் தடை செய்யப்படும்

பம்பலப்பிட்டி, வியாழன்

கொழும்பில் பஸ்களிலும், சினிமா தியேட்டர்களிலும் புகைப்பதைத் தடைசெய்ய விரைவில் சட்டமியற்றப்படலாம்.

இவ்விரண்டு இடங்களிலும் புகைப்பதைத் தடைசெய்யவேண்டுமென்ற இரு தீர்மானங்கள் கொழும்பு மாநகரசபையினால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மேயர் திரு. வின்சன்ட் பெரேரா தெரிவித்தார். இத்தீர்மானங்கள் இப்பொழுது சட்டமியற்றும் பொருட்டு அட்டோர்ணி ஜெனரலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## இடமாற்ற திட்டத்தை ஒத்திவைக்க கோரிக்கை

கொழும்பு, வியாழன்

புதிய கல்வி மசோதா நிறைவேற்றப்படும்வரை வசதியுள்ள இடத்திலிருந்து வசதி குறைந்த இடத்திற்கு, ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்துள்ள தற்போதைய திட்டத்தை நிறுத்திவைக்குமாறு அகில இலங்கை அரசினர் ஆங்கில உதவி ஆசிரி[illegible]யைக் [illegible]

## "தயாராகுமாறு நான் யாரையும் அழைக்கவில்லை" சிறிமாவின் மறுப்பு

கொழும்பு, வியா.

''நாட்டையும், பௌத்த சமயத்தையும், சிங்கள சமூகத்தையும் பாதுகாப்பதற்குச் சிங்கள-பௌத்த மக்கள் இரத்தம் சிந்தக் கூடத் தயாராக இருக்க வேண்டும்'' எனத் தாம் வாரியப்பொலவில் பொதுக் கூட்டமொன்றில் பேசியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தவறானதென்றும், இதுபற்றித் தாம் ஆச்சரியமடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்

இதுசம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''சமஷ்டிக்கட்சியுடன் ஐக்கிய தேசியக்கட்சி இரகசியமாகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரதியொன்று, அவர்களுடைய இரும்புப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டுஇப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வசம் இருக்கிறதென்பதை அறிய திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அதிர்ச்சியடைவார்'' என நான் அக்கூட்டத்தில் கூறியதாக வெளியான செய்தியும் பொய்யானது. என்று செய்திகளை வெளியிடுவதில் இவ்வித திரிபுபடுத்துவது பத்திரிகைகளுக்கு புதியதொன்றல்ல.

இராணுவத்தில் கத்தோலிக்கர்களுக்கே இன்னும் உயர் பதவிகள் வழங்கப்பட்டுவருவதாகத் தாம் சொன்னதாக வெளியான செய்தியையும் அவர் மறுத்துள்ளார்.

## ரஷ்யருக்கு 5 கோல்கள்

கொழும்பு, புதன்

ரஷ்ய 'டைனமோ மிங்க்ஸ்' உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும் இலங்கை உதைபந்தாட்டச் சங்கக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற முதலாவது போட்டியில் ரஷ்யக் கோஷ்டி 5—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இடைவேளையின்போது ரஷ்யர்கள் 4 கோல் போட்டிருந்தார்கள் திடீரென மழை பெய்யாமலிருந்திருப்பின் அவர்கள் இன்னும் பல கோல்களைப்போட்டிருப்பார்கள்.

இந்த விளையாட்டு சுகததாஸா திடலில் நேற்றிரவு மின்விளக்கில் நடைபெற்றது.

இடைவேளைக்குப்பின் ரஷ்யர்கள் 5-வது கோலைப் போட்டுவிட்டு, ஆறுதலாக விளையாட ஆரம்பித்தார்கள்

இலங்கைக் கோஷ்டிக்கு கோல் போட ஒரு சந்தர்ப்பம் மட்டுமே கிடைத்தது. ஆனால் ரஷ்ய பின்னணி வீரர் அதைத் தடுத்துநிறுத்திவிட்டார்.

வெள்ளிக்கிழமை கண்டியில் இரண்டாவது போட்டியிலும், ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் 3-வது போட்டியிலும் ரஷ்யர்கள் கலந்து கொள்வார்கள். (பி. டி. ஐ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒரு குடும்பம் ஒரு நாடு போன்றது. குடும்பப் பணியைப் பயன் கருதாது குறைவற நிறைவேற்றும் ஆற்றல் உற்ற பின்னர் பற்றில்லாமல் பெரும் பணிசெய்யப் புறப்படுதல் நலம். —திரு. வி. க.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 5

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை 25 (10-12-65)

## நிரந்தரப் பிரச்னை

மழைபெய்துசற்றுஓய்ந்திருக்கிறது. மழைபெய்து சிறு வெள்ளம் ஏற்பட்டாலும் வருடாவருடம் ஏற்படும் பிரச்னைகள் இம்முறையும் ஏற்பட்டுள்ளன. வழமைபோல் இம்முறையும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. வெள்ளத்துடன் புயலும் அவதான நிலையம் எதிர்பார்த்து எச்சரிக்கை செய்தபடி வீசியிருந்தால் சேதமும் அதிகரித்திருக்கும். நிவாரணஉதவியும் அதிகம் வழங்கவேண்டி நேர்ந்திருக்கும்.

வெள்ளம் ஏற்பட்டுள்ள பகுதிகளிலும் வெள்ளத்தினால் வீடுகள் இடிந்து விழுந்தும், சேதமடைந்தும் வீடுகளை இழந்தவர்களும் பாடசாலைக் கட்டிடங்கள், கிராமமுன்னேற்றச்சங்க மண்டபங்கள், மற்றும் தனியார் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். அரசாங்கமும் அவர்கள் பட்டினிகிடக்காமல் ஏதோ வழமை போல் உதவிசெய்கிறது. மற்றையோரும் தம்மாலான உதவியை அளிக்கின்றனர். ஆபத்து நேரத்தில் உதவிசெய்யும் மனப்பான்மையை மக்கள் வெளிக்காட்டுவது பாராட்டுதற்குரியது.

வெள்ளமும்புயலும்ஏற்பட்டாலும் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடுஏற்படாமல் போதிய உணவுப்பொருள்களை அந்தந்தப்பகுதியில் முன்னேடி நடவடிக்கையாக சேமித்து வைக்க அந்தந்தப்பகுதிஅரசாங்கஅதிபர்கள் ஒழுங்கு செய்திருக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என உறுதியளித்திருக்கிறார். இது பாராட்டவேண்டிய விஷயம்.

ஆனால் தாழ்ந்த பகுதிகளிலும், குளத்தங் கரைகளிலும் கரையோரப்பகுதிகளிலும், குடியேறியிருக்கும் குடிசை வாசிகள் வருடாவருடம் வெள்ளம், மழை, காற்று ஆகியவைகளினால் வீடுவாசல்களை இழப்பதும், வீடுவாசல்களைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுவதும் அவர்களுக்கு நிவாரணஉதவி அளிப்பதும் வழமையாய்த் தொடர்ந்துவரவேண்டியதுதானு? குடிசைகள் அழிந்ததும் மீண்டும் அந்த இடங்களிலே குடிசைகள் அமைத்து அடுத்தவருட மழையையும் வெள்ளத்தையும் எதிர்பார்த்து இருக்கத்தான் வேண்டுமா?

குடிசைகளுக்குப் பதிலாக வருடாவருடம் தஞ்சம்புகும் பாதுகாப்பான பகுதிகளில்நிரந்தரமான, பாதுகாப்பான கட்டிடங்களைக் கட்டி அவர்கள் நிம்மதியாக வாழ வழிவகுக்க முடியாதா? வந்தபின் காப்போனுக இராது வருமுன் காப்போனுக இருப்பதற்கு இந்த நல்லமுயற்சிகளைத் திட்டமிட்டுச் செய்ய அந்தந்தப் பகுதி ஸ்தல ஸ்தாபன சபைகள் முன்வரவேண்டும். இதற்கு அரசாங்கமும் உதவியளிக்க வேண்டும். இதன் மூலம் மக்கள் நிம்மதியாக வாழ்வதக்கு மட்டுமல்ல வருடா வருடம் நிவாரண உதவியாகச் செலவிடும் பெருந்தொகையான பணத்தை மிச்சப்படுத்தவும் வழி பிறக்கும்.

## மனிதஉரிமைகள் தினம்

இன்று மனித உரிமைகள் தினம். உலகநாடுகள் பலவற்றிலும் இத்தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையிலும் இன்று இத் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

ஆனல் மனிதனுக்கு அவனது உரிமைகள் அனைத்தும் கிடைத்து விட்டனவா? உலகில் எல்லா நாடுகளிலுமே மனிதனுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஜனநாயக நாடுகளிலும் சரி பொதுவுடைமை நாடுகளிலும் சரி மனிதன் தனது உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிடவில்லை; அனுபவிக்கவும்இல்லை. நாடுகளுக்கிடையிலும்கூட ஏற்றத்தாழ்வுகள் நீங்கவில்லை, மாறுக அணு அயுதப்போட்டியும், பலப் பரீட்சைகளும் அதிகரித்து நாடுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளும் கோஷ்டிப் பூசல்களும் வளர்ந்து வருகின்றன.

தென்னபிரிக்காவில் இன்னும் இனஒதுக்கல் கொள்கை மாறவில்லை. ரொடீஷியாவில் புதிய இனஒதுக்கல் தலைதூக்கியுள்ளது. மனிதரில் ஒரு பிரிவினரை அடிமைகளாக மற்றெரு பிரிவினர் கருதும் மனப்பான்மை ஒழியவில்லை.

நமது நாட்டில் தேசிய ஐக்கியத்தை உருவாக்க முயற்சிசெய்யும் அதே சமயம் மொழி, இனம், மதம் ஆகியவைகளைக் காட்டி மனிதருக்குள் மனிதரை வேறுபடுத்தி துவேஷத்தை ஏற்படுத்துவதில் ஒருசிலர் தீவிரமாக ஈடுபடுகின்றனர். பெரும்பான்மைச் சமூகத்தினர் தங்கள் உரிமைகளை வழங்க மறுக்கிறார்கள் என்று குரல் எழுப்பும் சிறுபான்மைச் சமூகத்தினர் தங்களுக்குள்ளேயே 'ஜாதி' பேதம் காட்டி மனிதரைப் பிரித்துவைக்கும் மனப்பான்மையை இன்னும் விட்டொழிக்கவில்லை.

மனிதனை மனிதன் மனிதனுக மதித்து அவனும் தன்னைப்போல் ஒருவன்தான் என்பதை உணர்த்தி உலகம் ஒரு குடும்பமாக வாழ மனித உரிமைகள்தினம் வழிகாட்டவேண்டும்.

கொழும்பில்

## நாவலர் நினைவுவிழாவை இருசங்கங்கள் கூட்டாக நடத்தும்

வெள்ளவத்தை, வியா.

நாவலர் விழாவை அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து விரிவான முறையில் நடத்துவதென்று கொழும்பு இந்து வாலிபர் சங்கம் முடிவுசெய்துள்ளது. அண்மையில் நடைபெற்ற இந்து வாலிபர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்விதம் முடிவுசெய்யப்பட்டது. கூட்டத்துக்கு உபதலைவர் திரு. வே. க. சுப்பையா தலைமைவகித்தார். பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் வளர்ச்சி நிதிக்காக வெள்ளவத்தை சபையர் படமாளிகையில் 'பாசமலர்' என்னும் படக்காட்சியை நடத்துதல்.

சைவப்பெரியார் திரு. குமாரசுவாமியால் கொடுத்துதவப்பட்ட சங்கத்தின் புதிய அலுவலகத்தை எதிர்வரும் சோமவாரத்தில் சமய ஆசாரப்படி அங்குரார்ப்பணம் செய்துவைத்தல்.

### நூல் அரங்கேற்றம்

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவிருக்கும் நாவலர் விழாக்களின்போது 'நாவலர் இந்துக்களின் வீறுடைய சீர்திருத்தக்காரர்' என்னும் நூலுக்குப் பாராட்டளிக்கப்படுவதுடன், அந்நூல் அரங்கேற்றமும் செய்துவைக்கப்படும்.

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியராக கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் கடமையாற்றும் திரு. வை. முத்துக்குமாரசாமியால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இந்நூல் முதல்முறையாக எதிர்வரும் 14ந் தேதி யாழ்ப்பாணத்தில் நாவலர் பரிபாலன மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நாவலர் விழாவின்போது அரங்கேற்றம்செய்து வைக்கப்படும். கொழும்பில் டிசம்பர் 15, 16ந் தேதிகளில் அரசாங்க ஊழியர்களால் விரிவான முறையில் கொண்டாடப்படவிருக்கும் நாவலர் விழாவின்போது இந்நூலுக்குப் பாராட்டு வழங்கப்படும்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 18, 19ந் தேதிகளில் அகில இலங்கை இந்து மாமன்றமும், பிற இந்து மாமன்றங்களும் கூட்டாகச் சேர்ந்து நடாத்தும் நாவலர் விழாவின்போது இந்நூலைப் பற்றி திருவாளர்கள் கோ. ஆழ்வாப்பிள்ளை, மு. வைரவப்பிள்ளை ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

திரு. சோ. சிவபாதசுந்தரம் ஆறுமுகநாவலரைப் பற்றிச் சிறிய அளவில் வெளியிட்டுள்ள நூலுக்கு அடுத்ததாக விரிவானமுறையில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் நூலாக இது அமையும். இதன் ஆசிரியர் ஈழவளநாட்டுக் கோயில்களை விரிவாக ஆராய்ந்து எண்ணிறந்த கட்டுரைகளை எழுதியுள்ளார். தாகூரின் நாடகங்கள் பல இவரால் மொழிபெயர்க்கப்பட்டுஇலங்கை வானெலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

## சிரமதானம் மூலம் வீதி

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவு கிழக்குக் கடற்கரையோரமாக இருந்த வீதி சென்ற வருடம் வீசிய சூறுவளியால் கடலில் மூழ்கி முற்றிலும் அழிந்துபோனதிலிருந்து இற்றைவரை மக்கள் வேறு ஒரு வீதியை உபயோகித்து வந்தார்கள். ஆனல் இவ்வீதி அதிக தூரமானதாகவும், மழை காலத்தில் பாவிக்க முடியாமல் இருப்பதாலும் தொடர்ந்தும் அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது இப்பகுதியில் உள்ள மக்கள் சிரமதான இயக்கம் மூலம் கடற்கரை வீதியைத் திருத்தி அமைக்க முன்வந்துள்ளார்கள். இவ்வீதிக்குரிய நிலத்தை கடற்கரை ஓரங்களில் உள்ள காணிக்காரர்கள் கொடுக்கச் சம்மதித்துள்ளார்கள்.

இதற்கான கூட்டம் ஒன்று சென்ற 5-12-65 ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் திரு. ம. கணபதிப்பிள்ளையின் தலைமையில் கூடி ஆரம்ப வேலைகள் பற்றி ஆராயப்பட்டது. வேலைசெய்வோருக்கு மக்களிடம் பணமும், பொருளும் திரட்டி உணவளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. 12 பேர் கொண்ட உணவுக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. சிரமதான வேலைகள் இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உருளைக்கிழங்கு உற்பத்தி

உடுப்பிட்டி, வியாழன்

வடமராட்சிகமத்தொழில் இலாகாவினரின் வேண்டுகோளின்படி நெல்லியடி, கரணவாய், துன்னலை வடக்கு ஆகிய பகுதிகளிலுள்ள இளைஞர் விவசாயக் கழகங்கள் இம்முறை உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவிருக்கின்றன.

நெல்லியடி சனசமுகநிலைய மண்டபத்தில் 'உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கை' பற்றி உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை விரிவான சொற்பொழிவு நிகழ்த்தினர். வடமராட்சி மண்ணில் உருளைக்கிழங்கு பயிரிடுவதனுல் அதிக அளவு இலாபத்தைப் பெறமுடியுமென்றும், விவசாயிகள் முயன்ருல் உள்ளூர் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் கொழும்புக்கும் ஏற்றுமதி செய்யலாமென்றும் அவர் தெரிவித்தார்.

## "அரச பீடத்தில் தமிழ் மொழி"

பம்பலப்பிட்டி, வியாழன்

டட்லி - செல்வநாயகம் இரகசிய ஒப்பந்தத்தை ஆட்சேபித்து பிரதமருக்கு ஒரு கடிதத்தை களுத்துறை பௌத்த முன்னணியின் காரியதரிசி வண. பெட்டியாகொட ஞானராமா அனுப்பியுள்ளார்.

சிங்களத்தை அரசபீடத்தில் ஏற்றிவைப்பதாக பிரதமர் நாடெங்கிலும் சொல்லிக்கொண்டுவந்தபோதிலும், இன்று அரசபீடத்தில் தமிழ்மொழியே இருக்கிறதென்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்தி இம்மாதம் 7ம் திகதி 'ஜனதின' வில் வெளியாகியுள்ளது.

## சேமலாப நிதியில் தாமதம்

கொழும்பு, வியா.

பல இலங்கையரல்லாதவர்களின் ஸ்தாபனங்களும், இலங்கையரின் ஸ்தாபனங்களும் ஊழியர் சேமலாப நிதிச்சேமிப்பு நிர்வாகத்தில் உள்ள தாமதத்தினுல் ஊழியர்களை ஏமாற்றக்கூடிய நிலையிலிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

## குடியேற்றவாசிகள் கதி

சுதந்திரபுரம் குடியேற்றவாசிகளுக்கு இரண்டு வாரமாக பங்கீட்டரிசி விநியோகிக்கப்படவில்லை. இதனுல் மக்கள் மிகவும் கஷ்டமடைந்தனர். 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்கத்தால் அளிக்கப்படும் உதவிப்பணம் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. அறிவித்தலை நம்பி குடியேற்றவாசிகள் தங்களுடையவேலைகளைவிட்டுவிட்டு அரசாங்க உத்தியோகத்தரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அன்று மழை ஓய்ந்திருந்தும் இரவு வரை உத்தியோகத்தர் ஒருவரும் வரவில்லை. குடியேற்றவாசிகள் ஏமாற்றத்துடன் தங்கள் காணிகளுக்குச் சென்றுவிட்டனர். இந்த அரசாங்கப் பணத்தை நம்பி தொழிலாளர்களைக் கொண்டுவந்தவர்களும் உணவுப் பொருட்களை அயலிலுள்ள கிராமத்துக்குச் சென்று வாங்க காத்திருந்தவர்களும் ஏமாற்றமடைந்தனர். எனவே மறுநாள் காலை கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர், காரியதரிசி ஆகியோரது தலைமையில் குடியேற்றத் திட்டத்திலுள்ள படித்த வாலிபர் இருபது பேர் வவனியாக் கச்சேரிக்கு அரசாங்க அதிபரைச் சந்திக்கச்சென்றனர். துரதிர்ஷ்டவசமாக அரசாங்க அதிபர் கொழும்பு சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்பு கக்சேரியில் மாவட்ட காணி அதிபரின் அறையை இவ்வாலிபர் கூட்டம் முற்றுகையிட்டு தங்களுடைய குறைகளைவிளக்கிக்கூறியது. இதில் என்ன விசேஷமென்றல் மாவட்ட காணி அதிபர் சுதந்திரபுரம் குடியேற்றத் திட்டத்தில் காணி கொடுக்கும்போதுதான் சுதந்திரபுரம் வந்திருந்தார். அதன்பின் ஒன்பது மாதங்களாகியும் இன்றுவரை சுதந்திரபுரம் வந்ததே கிடையாது. அயலிலுள்ள தேவபுரம், ஆனந்தபுரம் போன்ற குடியேற்றவாசிகள் தாங்களும் அரசாங்க உத்தியோகத்தரின் நசுக்கதலிலிருந்து விடுபட்டு வாழ வேண்டுமென விரும்புகின்றனர். அரசாங்க உத்தியோகத்தர்கள் குடியேற்றவாசிகளுக்குச் செய்யும் அநியாயங்கள் சொல்லொணுத் துன்பத்தைக் கொடுக்கின்றன. சுதந்திரபுர வாலிபரின் முயற்சியால் இரண்டு வாரம் கொடுபடாமல் இருந்த அரிசி உடனடியாகக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்ததுடன் மறுநாளே உதவிப்பணம் கொடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டது. அரசாங்க உத்தியோகத்தர்கள் குடியேற்றவாசிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும். உபத்திரவமாக இருப்பது குடியேற்றத் திட்டங்களின் நோக்கத்தையே சிதைத்துவிடும். இவ்விஷயத்தில் அரசாங்கம் அக்கறை செலுத்துமா?

குடியேற்றவாசி
த. அரிதரன்.

## அவதான நிலைய அறிக்கை

கொழும்பு, வியாழன்

இந்தியாவின் தென்மேற்கு உஷ்ண மண்டலத்தில் புயல் காணப்படுவதால் இலங்கையின் வடக்கு, வடமேற்கே கடும் மேகங்கள் இருக்கும் என்றும் இடையிடையே மழை பெய்யுமென்றும் கொழும்பு அவதான நிலையம் அறிவித்திருக்கிறது. தென் மேற்குப் பகுதியில் மழைத்தூறல் காணப்படுமென்றும் அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியா மீது மேலும் பலநாடுகள்

# வர்த்தக பகிஷ்காரம்

# பிரிட்டனுடன் ராஜிய உறவை துண்டிக்க கெய்ரோ முன்னறிவிப்பு

## ஆபிரிக்க படைகள் செல்ல காங்கோ கடப்பு வசதி தருமாம்

லண்டன், டிசம்பர் 9

ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனுடன் தங்கள் ராஜிய உறவை முறித்துக்கொண்டால், அங்குள்ள பிரிட்டிஷ் தூதராலய ஊழியர்களை வெளியேற்ற, சகல ஆயத்தங்களையும் தயாராய் வைத்திருக்குமாறு ஆபிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் தூதராலயங்களுக்கு உத்தர விடப்பட்டிருக்கிறது.

வருகிற 15ந் திகதிக்குள் ரொடீஷிய கலக அரசாங்கத்தை நசுக்காவிட்டால் காமன் வெல்த்திலிருந்து விலகுவதாக ஆபிரிக்கநாடுகள் அறிவித்திருப்பதை அலட்சியம் செய்யமுடியாதென்று காமன்வெல்த் உறவுமந்திரி திரு. பொட்டம்லி கூறினுர்.

இதற்கிடையில் மேலும் பல நாடுகள் ரொடீஷியாவுக்கு எதிராக வர்த்தக பகிஷ்காரத்தைமேற்கொண்டிருக்கின்றன.

ஸ்டர்லிங் செலாவணியைப் பெறுவதை ஸ்மித் அரசாங்கம் நிறுத்தியதால், மாலாவி அதனுடன் தற்காலிகமாக வர்த்தகத்தை நிறுத்தியிருக்கிறது. உகண்டாவும் இவ்விதத் தடை விதித்திருக்சிறது.

பிரிட்டன், ஸ்மித்தை நசுக்காவிட்டால் வருகிற 15ந் தேதியுடன் ராஜிய உறவை முறித்துக்கொள்ளப்போவதாக நேற்று கெய்ரோவிலுள்ள பிரிட்டிஷ் தூதரிடம் ஐக்கிய அராபியக்குடியரசின் வெளிநாட்டு மந்திரி கூறினுர்.

ரொடீஷியாமீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள, ஆபிரிக்க படைகள் செல்வதற்கு கடப்பு வசதி அளிப்பதாகக் காங்கோ தெரிவித்திருக்கிறது.

கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ரொடீஷியா மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள ரொடீஷிய டாலர் மூலதனத்தை அமெரிக்கா பிரிட்டனிடம் கையளித்திருக்கிறது.

மேற்கு ஜெர்மனி ரொடீஷிய புகையிலையைத் தடை செய்திருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மக்டொனுல்ட் ஸாம்பியா அதிபர் கவுண்டாவுடன் பேச அங்கு மீண்டும் சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனுதிபதி கவுண்டா மேலும் பிரிட்டிஷ் துருப்புகளைக் கோரியிருப்பதாய் மேலும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஸ்மித் அரசாங்கம் கடுமையான பல பதில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது

## லோகசபையில் 'டைம்' சஞ்சிகை

புதுடில்லி, டிச. 9

'டைம்'. 'நியூஸ் வீக்' ஆகிய அமெரிக்க சஞ்சிகைகளைத் தடைசெய்யுமாறு 18எதிர்க்கட்சியினர்விடுத்த கோரிக்கையை இந்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

இந்தியாவைப் பற்றி மோசமான முறையில் அவைகள் பிரசாரம்செய்து வருவதே இதற்குக் காரணம்.

எனினும் இந்தப் பத்திரிகைகளின் டில்லிப் பிரதிநிதிகளை அழைத்து அவர்கள் தவருன விஷயங்களை எழுதுவதாக அரசாங்கம் கூறவிருக்கிறதென உதவிமந்திரி மிஸ்ரா கூறினுர்.

இந்த சஞ்சிகைகளின் பிரசுரகர்த்தாக்களுடன் விஷயம் பற்றித் தொடர்பு கொள்ளுமாறு வாஷிங்டனிலுள்ள இந்தியத்தூதர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்

## மயிரிழையில் கவர்னர் தப்பினுர்

புதுடில்லி, டிச. 9

நேற்று முன்னணிப் பகுதியில் சில இடங்களைப் பார்வையிட்டபஞ்சாப் கவர்னர் பாகிஸ்தானிய துப்பாக்கிக் குண்டிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினுர். கவர்னரைக் கண்டவுடன் பாகிஸ்தானியர் அவர் மீது சுட ஆரம்பித்தனர். உடன் பாதுகாப்புக்குழிக்குள் கவர்னரின் கோஷ்டி மறைந்து மரணத்திலிருந்து தப்பியது. இது புதிய விஷயமல்ல என்றும். பாகிஸ்தானியர் தினமும் இப்படித்தான் செய்து வருகிருர்களென்றும் அப்பகுதி தளபதி கவர்னருக்குவிளக்கினுர்.

# பிரிட்டிஷ் முயற்சி பற்ருக்குறையானது

## ரொடீஷியா பற்றி காந்திஜீ பேரர் பேட்டி

லண்டன், டிச. 9

ரொடீஷிய நெருக்கடியைத் தீர்க்க பிரிட்டன்மேற்கொண்டுள்ள முயற்சி முற்ருக பற்ருக்குறையானது என மகாத்மாகாந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தி இங்கு கூறினுர்.

இங்குள்ள கென்யாட்டா கல்லூரியில் நடைபெறும் தார்மீக புனருத்தாரண மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு, ராஜ்மோகன் லண்டன் வந்திருக்கிருர்

இவ்விஷயமாக ஆபிரிக்க மக்களின் தீவிர உணர்ச்சியைஅறிவேன். ஸ்மித் அரசாங்கத்தை வெளியேற்ற இன்னும் பலமான முயற்சிகள் தேவை என்றும் காந்தி கூறினுர்.

கென்யாவில் நிலவும் இன சௌஜன்யம் ரொடீஷியாவுக்கும் வழிகாட்டவேண்டும் என்ருர் காந்தி.

(பி, டி. ஸி.)

## "பக்தூன் விடுதலைக்கு உதவினுல் இந்தியா வரத் தயார்"

### எல்லைக் காந்தி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 9

பாகிஸ்தான் பிடியிலிருந்து பக்தூன் மக்களை விடுவிக்க உதவி கிடைக்குமானுல் தாம் இந்தியா வரத் தயார் என எல்லைக்காந்தி கான் அப்துல் கபார் கான் தெரிவித்திருக்கிருர்.

மத்திய பக்தூன் ஜிர்காய் ஹிந்த் ஸ்தாபன பொக்கிஷதாரர் திரு. கே. பி. நாராங்குக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ''உங்கள் நாட்டை நீங்கள் மறக்காமலிருந்தால், உங்கள் நாடு பற்றி உங்களுக்குக் கவலையிருந்தால், ஓநாயின் பிடியிலிருந்து அதை விடுவிக்க விரும்பினுல் நான் இந்தியா வர விரும்புகிறேன்'' எனக் கூறியிருக்கிருர்.

''உங்களை எல்லாம் மீண்டும் சந்திக்க இந்தியா வர நான் விரும்பினுலும், எதற்காக விருந்துகளுக்கும் வரவேற்புகளுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்குமாக அல்ல. இத்தகைய விஷயங்களுடன் எனக்குத் தொடர்பு கிடையாது. ஆனுல் எனது இந்திய வருகை பக்தூன் விடுதலைக்கு உதவி புரியுமானுல் வரத் தயாராய் இருக்கிறேன்'' என எல்லைக்காந்தி மேலும் எழுதியிருக்கிருர்.

(பி. டி. ஐ.)

## லட்சம் மக்களுக்கு முன் பாப்பரசர் பிரார்த்தனை

### 3 ஆண்டு வத்திக்கான் திருச்சபை முடிவுக் கூட்டம்

வத்திக்கான், டிச. 9

மூன்ருண்டுகள் நடைபெற்ற வத்திக்கான் சபை தனது கூட்டத்தை முடித்துக்கொண்டபோது, சென். பீட்டர்ஸ் தேவாலயப் படிகளில் 1 லட்சம் மக்களுக்கு முன் போப்பாண்டவர் பிராத்தனை நடத்தினுர்.

உலகிலுள்ள 2300 ரோமன்கத்தோலிக்க பிஷப்புகளும் 86 நாடுகளின் பிரதிநிதிகளும், இதர திருச்சபைகளைச் சேர்ந்த 101 பார்வையாளர்களும், பல்வேறு சர்வதேச ஸ்தாபன பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

லத்தீன் மொழியில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆஸ்திரியா, பெல்ஜியம், அயர்லாந்து, இத்தாலி, மால்டா ஆகிய நாடுகளின் தலைவர்களும் அர்ஜண்டீனு, ஆஸ்திரியா, பெல்ஜியம், புருண்டி, ஐவரிகோஸ்ட், ஸ்பெயின், பிரான்ஸ், நிகராகுவா, போர்த்துக்கல், சென்மரினே, டோகோ ஆகிய 11 நாடுகளின் வெளிநாட்டுமந்திரிகளும், கியூபா, யூகோஸ்லேவியா ஆகிய கம்யூனிஸ்ட் நாடுகள் உட்பட பல நாடுகளின் ராஜதந்திர தூதர்களும் இப்பெரும் வைபவத்தில் பங்குபற்றினர்.

(பி. டி. ஸி.)

## புயலுக்கு கப்பல் பலி

தெல்லிச்சேரி, டிச. 9

2000 உப்பு மூட்டைகளுடன் பம்பாயிலிருந்து வந்த கப்பல் ஒன்று தெல்லிச்சேரி துறைமுகத்துக்கருகில் புயலினுல் உடைந்தது. கப்பலில் இருந்த 11 பேரில் 10 பேர் நீந்திக் கரைசேர்ந்தனர். ஒருவரைக் காணவில்லை. 2000 உப்பு மூடைகளும் கடலுடன் கரைந்தன

பி டி ஐ

## மாஸ்கோவில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பட்டம்

### $2\frac{1}{2}$ லட்சம் மக்கள் பங்குபற்றினர்

மாஸ்கோ, டிசம்பர் 9

அமெரிக்காவின் வியட்னும் கொள்கையை எதிர்த்து நேற்று மாஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதராலயத்துக்கு முன் இரண்டரை லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

தூதராலயத்தில் மனு ஒன்றை அவர்கள் கொடுக்க முயன்றனர். ஆனுல் அது ஏற்கப்படவில்லை.

இதற்கிடையில் கிறிஸ்மஸ் பரிசாக வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த சமரசப் பேச்சுக்கு வருமாறு ஜனுதிபதி ஜோன்ஸன் வடவியட்னும் தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆனுல் அமெரிக்காவுக்கு சமாதானத்தில் நாட்டம் இல்லை எனக்கூறி வடவியட்னும் அதிபர்டாக்டர் ஹோசிமின் இதை நிராகரித்தார். சமாதானத்தில் நாட்டமிருந்தால் வடவியட்னுமுக்கெதிராக ஆயிரக்கணக்கான தாக்குதல்களை அமெரிக்கா நடத்தியிருக்காதுஎன அவர் மேலும் கூறினுர்.

இதற்கிடையில் சைகோனுக்கு வடகிழக்கே நேற்று நடைபெற்ற கைகலப்பில் தென்வியட்னும் படைகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. 3 பெரும் வியட்காங் அணிகள் இப்பகுதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களை எதிர்க்க புதிய அணிகள் அனுப்பப்படுகின்றன.

### ஜனவரி 4-ல் சந்திப்பு நிச்சயம்

மாஸ்கோ, டிச. 9

ஜனவரி 4-ம் திகதி இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப் கானும் டாஷ்கண்டில் சந்திக்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றிருப்பதாக ரஷ்ய அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இருதரப்பினரின் விருப்பத்திற்கிணங்கதேவையான போது பேச்சுவார்த்தையில் ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் கலந்துகொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டது

அமைதியைத்தோற்றுவிக்கவும், இருநாடுகளிடையே நட்புறவு, நல்லெண்ணம் ஏற்படுத்தவும் உதவி புரிய ரஷ்யா விருப்பம்கொண்டிருப்பதாக அறிக்கை கூறியது.

## பண்டி ராஜினுமா

வாஷிங்டன், டிச. 9

ஜனுதிபதி ஜோன்ஸனின் உயர் ஆலோசகர்களில் ஒருவரான பண்டி ராஜினுமாச் செய்திருக்கிருர். 'போர்ட் பவுண்டேஷன்' தலைவராக அவர் பதவிஏற்பார்என அறிவிக்கப்படுகிறது. திரு. பண்டி, ஜனுதிபதி கென்னடியால் நியமிக்கப்பட்டவர்.

## 500 நாகர்கள் நுழைந்தனர்

புதுடில்லி, டிச. 9

ஆயுதங்களும், தளவாடங்களும் பெறவும், கொரில்லா பயிற்சி பெறவும் 500 நாகர்கள் பர்மா வழியாக கிழக்கு பாகிஸ்தானில் நுழைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன் 2000 பகைநாகர்கள் பர்மியப் படையினரால் விரட்டியடிக்கப்படு முன்பே இவர்கள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்க செனட்டர்கள்

புதுடில்லி, டிச 9

செனட்டர் மோர்ஸ் தலைமையிலான அமெரிக்க செனட்டர்கள் தூதுகோஷ்டி நேற்று முன்னணி பகுதி உட்பட, பஞ்சாபில் பல இடங்களுக்குச் சென்று வந்தது.

இன்று இரு கோஷ்டிகளாக அவர்கள் பிரிந்து ஒரு பகுதி பாகிஸ்தான் குண்டுவீசிய அமிர்தசரஸின் சிவிலியன் பகுதிக்கும், மற்றொர் பகுதி இந்தோ-சீன எல்லையான லடாக்கையும் சென்று பார்வையிடும்.

## மன்னருக்கு காந்தி நூல்

பங்களூர், டிச. 9

நேபாள மன்னர் மகேந்திராவும், ராணி ரத்னுவும் மூன்று நாள் தங்கும்பொருட்டு மைசூர் வந்தனர். நேற்று சேவா கிராமத்தில் அவர்களுக்கு காந்திஜி எழுதிய 3 புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

## எங்கும் தங்கம்

புதுடில்லி, டிச. 9

பிரதமர் சாஸ்திரியிடம் நேற்று பாதுகாப்பு நிதிக்கு 43000 கிராமுக்கு அதிகமான தங்கம் வழங்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர் காமராஜரிடம் 18000 ரூபாவும், 324 கிராம் தங்கமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினி ஒழிப்பு நீடிப்பு

ரோம், டிச. 9

பட்டினி ஒழிப்பு இயக்கத்தை மேலும் ஐந்தாண்டுகள் நீடிக்க ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் முடிவு செய்திருக்கிறது. இயக்கம் 1960-ம் ஆண்டில் தொடக்கப்பட்டது.

## 300 பேரைக் காணேம்

அமிர்தசரஸ், டிச.9

இந்தோ—பாகிஸ்தான் யுத்தத்தைத் தொடர்ந்து 300 சிவிலியன்கள் பஞ்சாபில் காணப்படவில்லை என முதன் மந்திரி அறிவித்திருக்கிருர்.

## ரஷ்ய வெளி விவகாரம்

மாஸ்கோ, டிச. 9

ரஷ்ய வெளிவிவகாரக் கொள்கை குறித்து வெளிநாட்டு மந்திரி குரோமிக்கோ சுப்ரீம் சோவியத்தில் இன்று அறிக்கை வெளியிடவிருக்கிருர்.

# "இந்த நாட்டுக்கே விசுவாசமாக இருங்கள்"

### இலங்கைப் பிரஜைகளாவோருக்கு இந்திய ஹைகமிஷனர் வேண்டுகோள்

பண்டாரவளை, வியா.

''இலங்கையின் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படுகிறவர்கள், கடைசி வரைக்கும் இந்நாட்டுக்கே விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும்''.

தமிழ்த் தோட்டச் சொந்தக்காரர்களாலும், தோட்ட உத்தியோகத்தர்களாலும் பண்டாரவளை ஹோட்டலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பொன்றில் இலங்கையில் உள்ள இந்தியக் ஹைகமிஷனர் டாக்டர் பீம்சன் சச்சார் உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நீங்கள் இந்நாட்டின் பிரஜைகள். உங்களுக்கு ஏதாவது பிரச்னைகள் ஏற்பட்டால் அதனை இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மொத்தம் இந்நாட்டில் 'நாடற்த்வர்கள்' என்று கூறப்படுபவர்கள் தொகை 9,75,000 இவர்களில் 3லட்சம் பேர்கள் இலங்கைப் பிரஜைகளாக்கப்படுவர். 'யார் அந்த மூன்று லட்சம்பேர்கள்?' என்பதை இப்போது கூறுவது கஷ்டம்.

''நாடற்றவர்கள்' என் போரில் யார் இலங்கையின் பிரஜைகளாக வர முடிவு செய்கிருர்களோ, அவ்ரே அவர்கள் இலங்கைக்கு விசுவாசமுள்ளவர்களாக நடக்க வேண்டும்''

இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்து திரு. சச்சார் பேசுகையில் இந்த ஒப்பந்தத்தை இந்தியா மனப்பூர்வமாக ஆதரிக்கிறதெனக் கூறினர். ——

## "சமய வகுப்புகள் அவசியம்"

கைதடி, வியாழன்

''இன்றைய உலகில் கொலையும், சண்டைகளும் ஏமாற்றுகளும் மலிந்திருப்பதற்குக் காரணம் முறையான சமயக் கல்வியின்மையாகும். சமயமானது ஒரு மனிதனை நல்வாழ்வு வாழ உதவுகின்றது. சைவசமய வகுப்புகள் கிராமங்கள் தோறும் நடாத்த சைவ ஸ்தாபனங்கள் முன்வர வேண்டும்'' என்று கைதடி வடக்கு குருசாமி வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தென்மராட்சி மேற்கு திருஞானசம்பந்த தர்மசபையின் சைவாசிரியர்கள் மகாநாட்டிற்கு திரு. நா. பொன்னம்பலம் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி சபை நடாத்தும் தென்மராட்சி மேற்கு பாடசாலைகளில் நடைபெறும் சமய வகுப்புகளுக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடுகள், நாவலர் பிரசுரங்கள் ஆதியனவற்றை பாடத்திட்டமாக உபயோகிப்பதென முடிவு செய்யப்பட்டது. ——

## 60 மைல் வேகத்தில் புயல்

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்தில் நேற்றிரவு 11 மணிக்கு, மணிக்கு 60 மைல் வேகத்தில் புயல் வீசியது இதனல் நங்கூரமிடப்பட்டிருந்த மூன்று கப்பல்கள் நங்கூரத்தை அறுத்துக்கொண்டு ...ளியே ...றததல்லபபட்டன. ...ர ...பபல்களின் உதவி...ன் இக்கப்பல்கள் மீண்டும் ந... ரமிடப்பட்டன. கப்பல்க...க்குச் சேதம் ஏற்படவில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு

வெள்ளி 10 - 12 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 7-45 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 யுனெஸ்கோ உரைச்சித்திரம், 9-45 நேயர்விருப்பம், 10-00 கிளாரினெட்.




உதைபந்தாட்டம்

# இ. போ. ச.வுக்கு அமோக வெற்றி!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் ஆரம்பமாகியிருக்கும் அரசாங்கசேவைகளுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் இளைஞர் குற்ற இலாக்காப் பகுதி கோஷ்டியும், இலங்கைப் போக்குவரத்துச் சபைத் கோஷ்டியும் மோதிக்கொண்டன. மிகவும் கவர்ச்சிகரமாகவும் 'விழுந்து விழுந்து' சிரிக்கக்கூடிய விதத்திலும் போட்டி அமைந்திருந்தது. போக்குவரத்துச்சபைக் கோஷ்டியினர் போட்டி ஆரம்பமாகி முடியும்வரை திறமையாக விளையாடி ஈற்றில் அமோக வெற்றியீட்டினர்.

இடைவேளையின் போது போக்குவரத்துச்சபைக் கோஷ்டியினர், எதிர்க் கோஷ்டியினர் ஒருகோலும் போடாதவகையில் 4 கோல்கள் பெற்றிருந்தனர். இளைஞர் குற்ற இலாகாக் கோஷ்டியினருக்கு பலதடவை கிடைத்த அரிய சந்தர்ப்பங்களை கோல்கள் போடாது தவறவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இடைவேளைக்குப் பின்னும் போக்குவரத்துச்சபைக் கோஷ்டியினர் 2 கோல்களைப் போட்டனர். இளைஞர் குற்றஇலாக்காக் கோஷ்டியின் காப்டனுன பாலசுப்பிரமணியம்பாராட்டக்கூடியவிதத்தில் விளையாடினர். இலங்கைபோக்குவரத்துச்சபைக் கோஷ்டியில் எஸ். வைத்திலிங்கம் 3 கோல்களும், ஐ. திருச்செந்தூர், ஜே. ஏபிரகாம், ஜேசுதாசன் ஆகிய வீரர்கள் ஆளுக்கு ஓவ்வொரு கோல்கள் போட்டு மொத்தம் 6-0 கோல்காளல் இளைஞர் குற்ற இலாக்காப் பகுதியை வெற்றிபெற்றனர்.

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. சண்முகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விளையாட்டுமைதான திறப்பு விழா

ஹொரணை, வியாழன்

இலிம்பே காமினி வித்தியாலயத்தில் புதிய விளையாட்டுமைதானத் திறப்பு விழா களுத்துறை உதவி வித்தியாதிபதி திரு. டி. எஸ். கலுகம்பிட்டிய தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜெனிடிமெல் விளையாட்டு மைதானத்தைத் திறந்துவைத்தார். சுமார் 35.000 சதுரஅடி விஸ்தீரணமுள்ள புதிய விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்து அவர் பேசுகையில் தாம் மைதானத்தைத் திறந்துவைப்பதில் மிக்க மகிழ்ச்சிகொள்வதாகவும் மாணவர்களின் உடல் உறுதிக்கு மைதானம் பெரும் உதவியாக இருக்குமெனத் தான் நம்புவதாகவும் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. டீ. நாணயக்காரா எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

உதவிவித்தியாதிபதி திரு. வீ. துரைசிங்கம், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பலர் திறப்புவிழாவையொட்டி அனுப்பியிருந்த ஆசிச்செய்திகள் வைபவத்தின்போது வாசிக்கப்பட்டன.

சென்ற வருடமும் இந்த வருடமும் நடைபெற்ற விவசாயப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குபரிசுகளும் தராதரப்பத்திரங்களும் திறப்பு விழாவைத்தொடர்ந்து வழங்கப்பட்டன. உதவிவித்தியாதிபதி திரு. வ. மெ. அ. வர்ணசூரியா இப்பரிசுகளை வழங்கினர். செக்கோஸ்லவேக்கியா ஸ்தானிகர் திரு. எஸ். பலெனர் விலை உயர்ந்த 6 பரிசுகளை வழங்கினர்

ஹொரணை மாவட்ட காரியாதிகாரி, விவசாயப் பிரச்சார உத்தியோகத்தர், வில்மட் ஏ பெரேரா திருமதி மல்லிகா குணதிலகா ஆகியோருட்படப் பலபிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்துபேசினர்கள்.

மாணவர்களது ஆங்கில நாடகமொன்று இறுதியில் இடம்பெற்றது


## விளம்பரம்

காட்டுத்திணைக்களம்-ஏலவிற்பனை

என் 2296 கல்முனை அரசினர் மரக்காலையில் இருக்கும் 1 271.2 கனஅடி கொண்ட 122 சவண்டலை ருணை. கல்லொதி, சாளம்பை, சிறுவிவாரி முதலிய மரங்கள் மட்டக்களப்பு வனபரிபாலன அதிகாரியால் 28-12-65 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மிகுதி விபரங்களுக்கு 10-12 65 திகதி வெளியிடப்பட்ட இலங்கை வர்த்தமானியைப் பார்க்கவும். 903

காட்டுத் திணைக்களம்—ஏலவிற்பனை

என் 2298 - கல்முனை அரசினர் மரக்காலையில் இருக்கும் 1,546.9 கன அடி கொண்ட 148 முதிரை, சவண்டலை, கல்லொதி, பாலை, ருணை முதலிய மரங்கள் மட்டக்களப்பு, வனபரிபாலன அதிகாரியால் 21-12-65 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மிகுதி விபரங்களுக்கு 10-12-65 திகதி வெளியீட்டப்பட்ட இலங்கை வர்த்தமானியைப் பார்க்கவும். 908

## வடபிரதேச ஆசிரியர் சங்கம்

விசேட பொதுக்கூட்டம்

காலம்: 11-12-65 சனிக்கிழமை மு. ப. 9-30 மணி

இடம்: உயர்கலை மன்றம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விஷயம்: இடமாற்றப் பிரச்னைக்கு முடிவுகாணும் முகமாக எமது திட்டத்தை வெளியிட்டு விளக்குதல்.

இடமாற்றம் கிடைத்த அனைவரும் தவருது சமுகமளிக்கவும். மற்ற மறுப்புக் கடித மாதிரிப் பிரதிகள் கொடுக்கப்படும்.

இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

கா. க. காசிப்பிள்ளை
பொதுக்காரியதரிசி

டயறம்ஸ்

## மலிவு விற்பனை

### விசேஷ விலை குறைப்பு

பின்னல் வருந்தாது நேர காலத்துடன் விரையுங்கள்

| | வ. வி | வி. வி |
|---|---|---|
| டிப்ளெமட் அம்பசடர் புஷ் சேட் | 13-50 | 9-75 |
| ,, லெஷர் புஷ்சேட் | 17-50 | 13-75 |
| ,, கொண்டினென்டல் சேட் | 15-50 | 12-90 |
| ,, லெஷர் சேட் | 17-50 | 13-50 |
| ஹென்ட்லி வை-கவுண்ட் புஷ் சேட் | 11-75 | 9-75 |
| ,, கமாண்டோ சேட் | 13-00 | 10-50 |
| ,, அம்பசடர் சேட் | 15-50 | 11-90 |
| ,, எக்ஸ்சலோ சேட் | 17-75 | 14-25 |
| டியூரோ ஸ்பெஷல் சேட் | 10-50 | 8-90 |
| ,, மிராக்கல் சேட் | 14-50 | 12-50 |
| ,, ரேசிஸ்டோ சேட் | 15-50 | 12-90 |
| ஸ்போர்டிவோ புஷ் சேட் | 17-50 | 11-90 |
| மூர்டெக்ஸ் புஷ் சேட் | 17-50 | 11-90 |

54-60, பெரிய தெரு, யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### தேவை

மருதங்கேணிவத்திராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தாளையடிக் கிளைக்கடைக்கு ஒரு உதவி மனேஜர் தேவை. கூட்டுறவுப் பயிற்சி உடையவராயும் வயது 21—40 க்குட் பட்டவராயும் இருத்தல் வேண்டும். சம்பளம் ரூபா 80/- முயற்சிக்கு ஏற்றபடி மேலதிக அலவன்ஸ் கொடுக்கப்படும். பிணை காசு 500/- ஆதனம் ரூ. 1000/- விண்ணப்பத்துடன் ஆறுமாதத்திற்குள் பெற்றஇரு நற்குணச்சான்றுப் பத்திரங்களுடன் 20-12-65க்கு முன் தலைவர், மருதங்கேணி வத்திராயன் ப. நோ. கூ. சங்கம், செம்பியன் பற்று என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1468

சிங்களமும் தமிழும் அச்சுக் கோர்க்கத் தெரிந்த ஒருவர் அல்லது சிங்களம் அச்சுக் கோர்க்கத் தெரிந்த மெசின் மைண்டர் ஒருவரும் சமையல் வேலை தெரிந்த ஒருவரும் 1-1-66 தொடக்கம் தேவை. திறமைக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படும். 28-12-65க்கு முன் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மனேஜர், சக்தி அச்சகம், முள்ளியவளை. 1461

தையல், பூவேலை முதலியவற்றில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. உடனே நேரில் மனுச்செய்க—அரசரத்தினம், 43, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம். 1473

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணைமுறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம். 1422

### காணவில்லை

W 107869, M 931824, C. 222579 இலக்க கூப்பன்கள் யாழ்ப்பாண கூ. மொ. வி. சங்கத்தில் (புடவைக் கடையில்) தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 1470


## தச்சன்தோப்புக்கு டிக்கெட் இல்லை

சாவகச்சேரி, வியா.

சங்கத்தானை புகையிரத நிலையத்தில் தச்சன்தோப்புக்கு டிக்கெட் இல்லாத காரணத்தினால் தச்சன் தோப்புக்குச் செல்லும் பிரயாணிகள் 20 சதத்திற்குப் பதிலாக 10 சதம் அதிகமாகக் கொடுத்து பிரயாணச்சீட்டுப்பெறும் நிலையிலிருக்கிறார்கள்.

தச்சன்தோப்புக்கு செல்லும் பிரயாணிகள் 30 சதம் கொடுத்து நாவற்குழி டிக்கெட் எடுக்கவேண்டிய நிலைமை கடந்த ஒருமாதகாலமாகச் சங்கத்தானையில் நடைபெற்றுவருகிறது.

இதுபற்றி டிக்கெட் ஏஜெண்டை கேட்டபோது தச்சன்தோப்பு டிக்கெட்டுக்கு ஒருமாதத்திற்கு முன் விண்ணப்பித்ததாகவும் இதுவரை பதில் வரவில்லையென்றும் கூறினர்.

## நீரிழிவு நோயாளர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நாளை மாலை 4 மணிக்கு நீரிழிவு நோயாளர் சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

இளைப்பாறிய சுகாதார அத்தியட்சகர் டாக்டர் கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் நீரிழிவு பற்றி உரை நிகழ்த்துவார்கள்.

## சலவைத் தொழிலாளர் ஆட்சேபம்

சாவகச்சேரி, வியா.

சாவகச்சேரி நகரசபைப் பகுதியிலுள்ள சலவைத் தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியை எதிர்த்து தென்மராட்சி சலவைத் தொழிலாளர் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

மற்றைய நகரங்களில் வரி விதிக்கப்படாமலிருக்கும்போது சாவகச்சேரியில் மட்டும் சலவைத் தொழிற்சாலைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பது முறையல்லவென மேற்படி சங்கம் நகரசபைத் தலைவருக்கும், அங்கத்தவர்களுக்கும் கடித மூலம் அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.


# நல்லூர் சிவன் கோவில்

## கடைசிச் சோமவார சஹஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம்.

(விசுவாவசு ஹூ கார்த்திகை மீ 28 உ (13—12—65) திங்கட்கிழமை)

பகல் 3 மணி சஹஸ்ர சங்காபிஷேகமும், மாலை 5 மணி பஞ்சமுகார்ச்சனையும், மாலை 6 மணி உற்சவமும் மாலை 6-30 மணிக்கு C. S S. மணிபாகவதர் அவர்களால் "சிவலிங்க சாக்ஷி" என்னும் சரிதம் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

இங்ஙனம்,
ஷை தேவஸ்தான பரிபாலகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கொந்தளிப்பு எச்சரிக்கை!

## புயல் அபாயம் நீங்கிவிட்டதாக அவதானநிலையம் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, புதன்

வங்காளவிரிகுடாவில் திருகோணமலைக்கு கிழக்கே 300 மைல் தொலைவிலும், கொழும்புக்கு வடமேற்கே 400 மைல் தொலைவிலும் கடுக்கொண்டிருந்த புயல் இப்பொழுது இலங்கையின் பக்கத்தைவிட்டு அகன்று கொண்டிருப்பதாக கொழும்பு அவதான நிலையம் அறிவித்துள்ளது.

எனினும் நாளை பிற்பகல் 2 மணிக்கிடையில் கடற்கொந்தளிப்பும் கடற்பெருக்கும் ஏற்படலாமென அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்தியாவில் நாகபட்டினத்துக்கு 1000 கிலோமீட்டர்தொலைவில் ஒருபுயல் சுழிஉருவாகி வடக்கு, வடகிழக்கு பக்கமாக சென்றுள்ளதாக சென்னை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# மனைவியின் வேண்டுகோளை மீறி கந்தோர் சென்றவர் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

இரண்டுவருட காலமாக இருதய நோயினால் கஷ்டப்பட்ட ஒருவர் சுகவீனமுற்றிருந்த சமயம் கந்தோருக்குச் செல்லவேண்டாமென மனைவி தடுத்ததையும் பொருட்படுத்தாமல் கந்தோருக்குச் சென்று அங்கு கடமையாற்றும் போது மரணமான சம்பவம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ளது.

தேர்தல் கந்தோரில் கடமையாற்றிய எஸ். அருணகிரிநாதனின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரிதிரு. ஏ.அமிர்தலிங்கம் மரனவிசாரணை நடத்தினார்.

வி. இராஜரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- காலஞ்சென்றவர் தேர்தல் கந்தோரில் என்னுடன் கடமையாற்றிவந்தார். அவருக்கு இரு வருடகாலமாக இருதய நோய் இருந்து வந்தது. சம்பவம் நடந்த தினம் காலை கந்தோருக்கு வந்தார். நான் நண்பகல் உணவு அருந்திவிட்டு கந்தோருக்கு வந்தபொழுது தியாகராசா என்பவர் வந்து காலஞ்சென்றவரை விசாரித்தார். அவர் உள்ளே இருப்பதாகக் கூறினேன். நான் உள்ளே சென்று பார்த்தபோது காலமானவர் மேசையில் கிடந்தார். அவரை எழுப்ப முயற்சித்தும் பயனில்லை. பின் டாக்டர் எஸ். வெற்றிவேலு வந்து, அவரை பரிசோதித்தபின் அவர் இறந்துவிட்டதாகக் கூறினார்.

காலஞ்சென்றவரின் மனைவி ஜெயலட்சுமி சாட்சியமளிக்கையில், முதல்நாள் தனது கணவன் சுகவீனமுற்றிருந்ததாகவும், கந்தோருக்குப் போகவேண்டாமென்று தான் விடுத்த வேண்டுகோளை நிராகரித்து கந்தோருக்குச் சென்றாரென்றும் கூறினார்.

டாக்டர் எஸ். செகராஜசேகரமும் சாட்சியமளித்தார். இயற்கை மரணம்என தீர்ப்பளிக்கப்பட்டது.

## பாடசாலைகள் ஜன. 7-ல் ஆரம்பம்

பம்பலப்பிட்டி, புதன்

அரசாங்க வித்தியாபதி முகாமைக்குட்பட்ட பாடசாலைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 7-ம் திகதியே ஆரம்பமாகும். முன்னர் அறிவிக்கப்பட்ட மாதி ஜனவரி 6-ந் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படமாட்டாதென்றும் 7-ம் திகதியே ஆரம்பிக்கும் எனவும் கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்கு மண்டபங்கள் உபயோகிக்கப்படுத்தப்படும் பாடசாலைகள் ஜனவரி மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகும் எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## யாழ். ஆஸ்பத்திரி கமிட்டி நியமனம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி கமிட்டிக்கு பின்வருவோரைசுகாதார அமைச்சர் நியமித்துள்ளார்:- டாக்டர் கே.கனகரத்தினம் (தலைவர்) திரு. ஸி. முத்துத்தம்பி, காதி. எம். எம். சுல்தான். ஹாஜி. வி. எம். எம், அபுசாலி, திரு. வி. செல்லத்தம்பி, திரு. எஸ். ஞானமூர்த்தி, டாக்டர். ஆர். கந்தையா, திரு.ஏ,பொன்னம்பலம், திரு.எஸ்.யு. சோமசேகரம், கேட் முதலியார் சி. தியாகராசா, திரு. ஜி நல்லையா, திரு. எம். யேக்கப், எம். பாஸ்கரதேவன், முகாந்திரம் ஈ. பி. இராசையா, டாக்டர் வி. ரி. பசுபதி, திரு. எஸ். முத்துக்குமாரசுவாமி, திரு. பி. ஆர். தம்பிஐயா' வடபகுதி சுப்பிரிண்டன்டிங் என்ஜினியர், பொது மராமத்துப் பகுதி யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் அத்தியட்சகர், யாழ்ப்பாணம்.

## கணவன் மனைவி கோர்ட்டில் ஆஜர்

யாழ்ப்பாணம், புதன்

கரையூரைச் சேர்ந்த சைமன் என்பவரின் மரணம் சம்பந்தமாக, யாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை முதன் முதலாக கணவன் சுப்பிரமணியமும் மனைவி அருளம்மாவும் ஆஜர்செய்யப்பட்டனர்.

சைமன் மரணமானதை தொடர்ந்து, பொலிஸார் முதலில் மனைவி அருளம்மாவை கைதுசெய்து ரிமாண்டில் வைத்திருந்தனர். அதன் பின் கணவன் சுப்பிரமணியம் கோர்ட்டில் சரணடைந்தார்.

நீதிபதி விசாரணையை இம்மாதம் 21-ம் திகதி வரை ஒத்திவைத்து, சந்தேக நபர்களை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

ரங்கூன், டிச.8

பர்மாவுக்கு வருமாறு புரட்சிசபைத் தலைவர் நீவின் விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் சாஸ்திரி ஏற்றுள்ளதாக இங்குள்ள இந்திய தூதுவர் இன்று தெரிவித்தார். திரு.சாஸ்திரி இங்கு விஜயம் செய்வதற்கான திகதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

## வள்ளச் சேவை சீர்குலைவு

நெடுந்தீவு, வியாழன்

கடும் மழையாலும் இடைஇடையே வீசிய காற்றின் காரணத்தாலும் ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையே நடைபெற்றுவந்த மோட்டார் வள்ளச் சேவை நேற்று சீர்குலைந்தது. இம்மோட்டார் வள்ளமே பிரயாணிகளையும் தபால்களையும் ஏற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## பிரபல சோதிடர் காலமானார்

காரைநகர், வியாழன்

காரைநகரைச் சேர்ந்த பிரபல சோதிடரும் திறந்த சமூகத் தொண்டருமான திரு. கா. சி. மகேஸ்வர சர்மா நேற்று முன்தினம் காலமானார். இவரது மறைவு காரைநகர் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். சோதிடத்தில் அவ்வப்போது எழும் ஐயங்களை தீர்த்துக்கொள்வதற்கு பலருக்கு இவர் உதவி புரிந்து வந்தார்.

## மக்கள் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை மக்கள் சபையின் கூட்டம் திரு. ஜி. ஜே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது அரசாங்க அதிபரினலும், காரியாதிகாரியினலும் நடத்தப்பட்ட 'பதுக்கல் வேட்டை'க்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்கள் பாவிக்கும் வேஷ்டி, சால்வை, சேலை என்பன தற்போது கிடைப்பது அரிதாக இருக்கிறது என்றும் இவை கூப்பனுக்குக் கிடைப்பதற்கு வழிசெய்யுமாறு அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

உணவுப் பொருட்களில் நடத்தப்பட்ட பதுக்கல் வேட்டை போன்று சிமெந்திலும் நடத்தப்படவேண்டுமென பல அங்கத்தவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டனர்.

## சிவநேசன் லண்டன் பயணமானார்

சுழிபுரம், வியாழன்

மானிப்பாயைச் சேர்ந்த பிரபல பொருளாதார அறிஞரான திரு. என். சிவநேசன் நேற்று லண்டன் பயணமானார். லண்டன் பல்கலைக்கழகத்தின் ஜெலன்ஸ் ஆராய்ச்சி உபகாரச்சம்பளத்தில் கல்வி கற்கும் முதலாவது இலங்கையர் இவரேயாவர். லண்டன் செல்வதற்கு முன் வேறு பல நாடுகளுக்கும் செல்லவிருக்கும் இவர் பாங்கொக்கிலும் டோக்கியோவிலும் நடைபெறவிருக்கும் ஆசியாவின் பொருளாதாரம் பற்றிய இரு சர்வதேச கருத்தரங்கங்களில் கலந்துகொள்வார். லண்டனில் மூன்று வருடகாலம் தங்கியிருப்பார்.


ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சனி, ஞாயிறு 4 காட்சிகள்

எஸ். பாலச்சந்தர்

எல். விஜயலக்ஷ்மி

நடித்த

பொம்மை

சென்னகத்தில் 100 நாட்


## பல்பு உற்பத்தி

கொழும்பு, புதன்

இலங்கைக்குத் தேவையான மின்சார 'பல்புகள்' முழுவதையும் இங்கேயே உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## வீதிகளின் சீர்கேடு

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் மேற்கு வீதிகள் பல காலமாகத் திருத்தப்படாமையால் மிகவும் சேதமுற்ற நிலையில் இருக்கின்றன. இதனால் இவ்வீதி வழியாகப் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் மிக்க இடைஞ்சலுக்குள்ளாகின்றன.

தற்கொலைக்கு

## ஒப்பந்தமே காரணம்?

கி. பெர்லின், டிச.9

கிழக்கு ஜெர்மன் வர்த்தக மந்திரி சுட்டுதற்கொலை செய்துகொண்டதற்கு ரஷ்ய கிழக்கு ஜெர்மனி வர்த்தக உடன்படிக்கையே காரணம் எனக் கூறப்படுகிறது. இந்த உடன்படிக்கை கிழக்கு ஜெர்மனிக்குத் தீமைபயக்குமென அவர், அதிபர் உல்பிரிட்சுடன் தகராறில் ஈடுபட்டிருந்தார்.

ஜாகர்த்தா, டிச. 9

இந்தோனேஷியாவின் உள் விவகாரத்தில் தலையிட வேண்டாமென பாதுகாப்பு மந்திரி ஜெனரல் நசூதியான்சீனவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.


அரசாங்க உத்தரவுபெற்ற (தனிப்பட்ட) வியாபாரிகள் சங்கம்

மேற்படி சங்கத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12-12-65) மாலை 3 மணியளவில் ஆரியகுளம் சந்தியில் அமைந்த நாகவிகாரை வித்தியாசாலையில் நடைபெறும்.

அத்தருணம் அங்கத்தவர்கள் யாவரும் தவருது சமுகம்அளிக்கும்படி மிகவும் அன்புடன்வேண்டுகின்ருேம்.

இங்ஙனம்,
காரியதரிசி.

1298

காணவில்லை

சுன்ஞகம் சந்தையில் நேற்று M 940285 (ஐ. ஆனந்தேவன்) M 940283 (ஐ. பத்மரஞ்சினி) ஆகிய கூப்பன்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுன்ஞகம் பொலிஸில் ஒப்படைக்கவும்.

1471

REGAL—JAFFNA
NOW SHOWING
ELVIS PRESLEY
IN
GIRL HAPPY
(Panavision - M. G. M's Color)

8-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2. 6, 9-30 மணிக்கு

தென்னட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி ஆர். — சரோஜாதேவி

(இருவேடங்களில்)

ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி

நடித்த



விஜயா கம்பைன்ஸ்

எங்கவீட்டுப் பிள்ளை

(ஈஸ்மென்கலர்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org